**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.30/2019 – P.W. – 5**

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. சரவணன் | Father's Name. ஜெகதீசன் |
| Village : வீரபுரம் | Age: 45 |
| Date : 07.08.2025 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 07.08.2025.

**(எதிரி ஆஜர்.)**

**(சாட்சி தற்போது தனது வயது 45 என்று கூறினார். இதற்கு முன்பாக அவரை கடந்த 12.02.2024ஆம் தேதி அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தி முதல் விசாரணை செய்தபோது அவரது வயது 50 என்று கூறியிருந்தார். அது குறித்து கேட்டபோது அவர் அப்போது பதட்டத்தில் தனது வயதை மாற்றி சொன்னதாகவும், அவரின் பிறந்ததேதி 02.01.1981தான் என்றும் அதற்காக தனது ஓட்டுநர் உரிமத்தையும் சமர்ப்பித்தார்.)**

**8ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**.

நான் ரவிச்சந்திரன் என்பவரிடம் எத்தனை வருடங்களாக ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன் என்று சொன்னால் கடந்த 15 வருடங்களாக அவரிடம் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவதற்கு முன்பாக மேற்படி ரவிச்சந்திரனிடம் நான் எத்தனை வருடங்களாக ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன் என்றால் கடந்த 2003ஆம் வருடத்தில் இருந்து நான் அவரிடம்தான் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 28.01.2010 ஆம் தேதி மாலை 07.00 மணியளவில் ஓ. எஸ். மணியன் தனது கட்சிக்காரர்களுடன் மருதூர், கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்திற்கு திருமணத்திற்கு வந்துவிட்டு திரும்ப இறங்கி **கடைசி படிக்கு முதல் படியில்** இருந்தபோதுதான் 1ம் எதிரியும் அவரோடு சேர்ந்து சுமார் 20 பேரரும் வந்து பிரச்சனையில் ஈடுபட்டதாக நான் முதல் விசாரணையில்

சொன்ன விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

அதேபோன்று சேதமதிப்பு ரூ.1,00,000 லிருந்து ரூ.2,00,000 இருக்கும் என்று நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மாக்கான் என்ற முருகானந்தம் அவரது கையில் கம்பியை வைத்து ஓ.எஸ். மணியனின் கால் மற்றும் இடுப்பு பகுதியில் அடித்தார் என்று நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

கடந்த 28.01.2010ஆம் தேதி மேற்படி திருமண மண்டபத்திற்கு ஓ.எஸ்.மணியனும் அவரது கட்சிக்காரர்களும் வந்துவிட்டு திரும்ப செல்ல கடைசி படிக்கு முதல் படியில் வந்தபோது, 1ம் எதிரி மற்றும் அவரோடு சேர்ந்து 20 பேரும் வந்ததாகவும், ஓ.எஸ்.மணியனின் கழுத்தை 1ம் எதிரி நெரித்து, வலது கையால் இடது கண்ணில் குத்தி, கண்ணிலும், மூக்கிலும் இரத்தம் வந்ததாகவும், அவரை அடிக்கும்போது, இவனை மானப்பங்கப்படுத்துங்கடா, அசிங்கப்படுத்துங்கடா என்று சொன்னதாகவும், கட்ட செந்தில், பாலமுருகன் ஆகிய இருவரும் ஓ.எஸ்.மணியனின் வேட்டியை பிடித்து இழுத்ததாகவும், ஓ.எஸ். மணியனின் காலை பிடித்து இழுத்து வந்து, வேரை காலால் ரஜினி, முருகானந்தம், பழனிவேல், வெற்றிவேல், வீரபாண்டியன், அருண் மற்றும் எல்லோரும் சேர்ந்து மிதித்ததாகவும் நான் முதல் விசாரணையில் சொன்ன சம்பவமே நடைபெறவில்லை என்று சொன்னால் சரிதான்.

போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த இரண்டு மாதம் கழித்துதான் விசாரணை செய்தார்கள்.

எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் எனது வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவதில் இருந்து என்னை போலீசார் விசாரணை செய்ததாக சொல்லப்படும் அந்த இடைப்பட்ட இரண்டு மாதத்தில் நான் ஊரில்தான் இருந்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்தில் எத்தனை படிக்கட்டுகள் உள்ளது என்றால் சுமார் 30லில் இருந்து 40 அல்லது 45 படிக்கட்டுகள் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட சமயத்தில் நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல சம்பவம் நடைபெறவில்லை என்றும் மேற்படி திருமணத்திற்கு வந்த ஓ.எஸ். மணியனும், அவரது கட்சிக்காரர்களும் சுமார் 200க்கும் மேற்பட்டோர் செங்குத்தான படிக்கட்டியில் முன்டியடித்துக்கொண்டு இறங்க முற்பட்டதில்தான் தள்ளுமுள்ளு ஏற்பட்டு சில பேர் விழுந்து காயம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான், நான் அதை தூரத்தில் இருந்துதான் பார்த்தேன்.

எனது ஓனர் ரவிச்சந்திரன் சொல்லிக்கொடுத்தன் அடிப்படையில் நான் முதல் விசாரணையில் தவறாக சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். நான் தற்போதும் மேற்படி ரவிச்சந்திரனிடம் ஓட்டுநராக தொடர்ந்து வேலை செய்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை –** இல்லை.

(ஒம்/– G. கிருஷ்ணன்)
தலைமை குற்றவியல் நடுவர்,
நாகப்பட்டினம்.